# சென்னை பன்னாட்டு விமான நிலைய விரிவாக்கப் பணிகளில் தாமதம் ஏன்?

## நாடாளுமன்றத்தில் – தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 20 - விமான நிலைய பணிக்கான காலவரம்பை ஒன்றிய அரசு மீண்டும் மீண்டும் மாற்றுவதற்கான காரணங்கள் என்ன என்று தயாநிதிமாறன் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

குறிப்பாக சென்னை பன்னாட்டு விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணியில் ஏற்பட்டுள்ள தாமதம் போல் மற்ற புதிய விமான நிலைய பணிகளும் பாதிக்குமா என்று விமான போக்குவரத்துத்துறை அமைச்சகத்துக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதிமாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :

சென்னை பன்னாட்டு விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்க பணி, மார்ச் 2026 இல் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டு உறுதிமொழிகள் அளிக்கப்பட்டிருந்தது. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும் இப்போது அந்தப் பணிக்கான காலவரையை 2026 இறுதி அல்லது 2027 தொடக்கம் வரை என நீட்டித்துள்ளதற்கான காரணங்கள் என்ன?

விமான நிலைய பணிக்கான திட்டத்தை விரைவுபடுத்தி நிறைவு செய்ய ஒன்றிய அரசும் இந்திய விமான நிலைய ஆணையமும் (AAI) எடுத்துள்ள உறுதியான நடவடிக்கைகள் என்ன? குறிப்பிட்ட காலத்திற்கு பணியை முடிக்காமல் தாமதம் ஏற்பட்டதற்காக விதிக்கப்பட்ட இழப்பீடு (liquidated damages) மற்றும் பயணிகளுக்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைக்க பயணிகளுக்கான போக்குவரத்து மேலாண்மை திட்டங்களின் விவரங்கள் என்ன?

இந்தத் தாமதத்தால் திட்டமிடப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை மற்றும் முதலீடுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் க்ரீன் ஃபீல்டு உட்பட மற்ற புதிய விமான நிலைய திட்டங்களை எந்தவகையிலாவது பாதிக்குமா?

விமான நிலைய பணிக்கான காலவரம்பை மீண்டும் மீண்டும் மாற்றுவதற்கான காரணங்கள்? திருத்தப்பட்ட செலவு விவரங்கள், நிதி சார்ந்த விளைவுகளுக்கு பொறுப்பேற்பது ஆகியவற்றை விவரிக்கும் ஒரு முறையான தாமத அறிக்கையை ஒன்றை அரசு வெளியிட உத்தேசித்துள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

---

### விவசாயம் மற்றும் விவசாயிகளைப் பாதுகாக்க –

# எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறையைத் தடுக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, டிச. 20 - எதிர்காலத்தில் நமது விவசாயம் மற்றும் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளைப் பாதுகாக்கவும், எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை பஞ்சத்தைத் தடுக்கவும், வளமான நிலத்தை பல்வேறு உள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதைக் குறைக்க ஒன்றிய அரசு உடனடியாகத் தேவையான நடவடிக்கை எடுக்குமா என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

சமீப காலமாக, நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, குறிப்பாக நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு நோக்கங்களுக்காக, பயன்பாட்டிற்காக விவசாய நிலங்களை கண்மூடித்தனமாக கையகப்படுத்துவதால், வளமான நிலம் குறைந்து வருவதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

எதிர்காலத்தில் நமது விவசாயம் மற்றும் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளைப் பாதுகாக்கவும், எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை/பஞ்சத்தைத் தடுக்கவும், வளமான நிலத்தை பல்வேறு உள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதைக் குறைக்க மத்திய அரசு உடனடியாகத் தேவையான நடவடிக்கை எடுக்குமா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறைக்கான அமைச்சர் கூறிய பதில் வருமாறு : 2023-24 நிலப் பயன்பாட்டுப் புள்ளி விபரத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, மொத்த பயிர்ப்பகுதி கணிசமாக விரிவடைந்துள்ளது, 2013-14ல் 201.3 மில்லியன் ஹெக்டேராக இருந்து 2023-24ல் 217.8 மில்லியன் ஹெக்டேராக உயர்ந்து, 2023-24ல் 9 மில்லியனாக உள்ளது. 2023-24 இல் ஹெக்டேர். வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை பல்வேறு நோக்கங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்கள் குறித்த தரவுகளை மையமாகப் பராமரிப்பதில்லை.

பட்டியல் II இன் நுழைவு எண். 18ன் படி, நிலமும் விவசாயமும் மாநிலப் பாடங்களாகும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் (மாநிலப் பட்டியல்). மத்திய மற்றும் ஸ்லேட் அரசாங்கங்கள் இரண்டும் தொழில்துறை திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நிலம் கையகப்படுத்துகிறது. இருப்பினும், நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு & மீள்குடியேற்றம் (RFCT LARR) சட்டம், 2013 இல் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத் தன்மைக்கான உரிமையை மத்திய அரசு இயற்றியுள்ளது, இது 01.01.2014 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ், பொது நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்படலாம். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாற்று நிலம் கிடைக்காத பட்சத்தில், சட்டத்தின் பிரிவு 10, பல பயிர் பாசன நிலத்தை கையகப்படுத்துவதை வெளிப்படையாகக் கட்டுப்படுத்துகிறது. இது போன்ற சந்தர்ப்பங்களில், விவசாய நோக்கங்களுக்காக சாகுபடி செய்யக்கூடிய தரிசு நிலத்தின் சமமானபகுதிஉருவாக்கப்பட வேண்டும் அல்லது கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் மதிப்புக்கு சமமான தொகையானது உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக விவசாயத்தில் முதலீடு செய்வதற்காக பொருத்தமான அரசாங்கத்திடம் டெபாசிட் செய்யப்படும். இந்தச் சட்டம், முற்றிலும் தேவைப்படாவிட்டால் இத்தகைய மாற்றங்களை கடுமையாக ஊக்கப்படுத்துகிறது. விவசாய நிலம் கையகப்படுத்தப்படும் இடங்களிலெல்லாம், பண இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றப் பலன்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில், நில இழப்பீட்டுக்கான நிலம் உள்ளிட்ட இழப்பீட்டு வழிமுறைகள் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும்.

நில வளத் துறையானது, பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாய் யோஜனாவின் (WDC PMKSY) நீர்நிலை மேம்பாட்டுக் கூறுகளை செயல்படுத்தி வருகிறது. திட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், மேடு பகுதி சுத்திகரிப்பு, வடிகால் பாதை சுத்திகரிப்பு, மண் மற்றும் ஈரப்பதம் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, நாற்றங்கால் வளர்ப்பு, மேய்ச்சல் மேம்பாடு, சொத்து இல்லாதவர்களுக்கான வாழ்வாதாரம் போன்றவை. WDCPMKSY இன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசாங்கத்தின் முயற்சிக்கு துணைபுரிகிறது. இத்திட்டம் 15 டிசம்பர் 2021 அன்று அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) சாகுபடி பரப்பை அதிகரிக்க பல தொழில்நுட்ப நடவடிக்கைகளை உருவாக்கியுள்ளது. மழைநீர் வெளியேறுவதால் ஏற்படும் மண் அரிப்பைச் சரிபார்க்க இடம் சார்ந்த உயிர்பொறியியல், மணல் மேடுகளை நிலைப்படுத்துதல் மற்றும் காற்று அரிப்பைச் சரிபார்ப்பதற்கான தங்குமிடப் பட்டை தொழில்நுட்பம் மற்றும் நாட்டில் பிரச்சனையுள்ள மண்ணை மீட்டெடுக்கும் தொழில்நுட்பம் ஆகியவை இதில் அடங்கும். ஐசிஏஆர் ஜிப்சம் தொழில்நுட்ப தொகுப்பையும் உருவாக்கியுள்ளது, இதில் நிலத்தை சமன் செய்தல், பந்தல் கட்டுதல், சுத்தப்படுத்துதல், உபரி நீரை அகற்றுதல், நல்ல தரமான நீர்ப்பா சனம், திருத்தங்களைப் பயன்படுத்துதல், பயிர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான ஊட்டச்சத்து மேலாண்மை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. பாழடைந்த மண்ணை மேம்படுத்தவும், பயிர் சாகுபடியின் கீழ் கொண்டு வரவும், மண் பரிசோதனை அடிப்படையிலான சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் தாவர ஊட்டச்சத்து மற்றும் இடம் சார்ந்த மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை ICAR பரிந்துரைக்கிறது.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

---

### கிராமங்களில் டிஜிட்டல் பிளவு

# உள்கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 20 - கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

நாடாளுமன்றத்தில் ஊரக மேம்பாட்டு துறையில் (அ) டிஜிட்டல் கிராமத் திட்டம் அனைத்து திட்டமிடப்பட்ட டிஜிட்டல் வசதிகளுடன் முழுமையாகச் செயல்படும் தமிழ்நாட்டிலும்! நாட்டிலும் உள்ள கிராமங்களின் விவரங்கள் என்ன?

(ஆ) அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் போதுமான இணைய அலைவரிசை, மின்சாரம் மற்றும் டிஜிட்டல் சாதனங்களுக்கான அணுகலை உறுதி செய்ய ஒன்றியஅரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

(இ) டிஜிட்டல் சேவைகளுக்கு சமமான அணுகலை உறுதி செய்ய பெண்கள், மாணவர்கள் மற்றும் விளிம்புநிலை குழுக்களுக்கு சிறப்பு முயற்சிகள் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டுள்ளதா?

(ஈ) இணைப்பு அல்லது வளக் கட்டுப்பாடுகளை எதிர்கொள்ளும் கிரா மங்களில் டிஜிட்டல் பிளவு மற்றும் உள்கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மறைந்த பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்தநாள் முன்னிட்டு அவரது படத்திற்கு சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர். வினோத்காந்தி மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஏ.கே.சுந்தரமூர்த்தி குமுதா குமார், ஆர்.சந்தோஷ் காந்தி க.சுந்தரம், பி.பூங்காவனம் து.தில்லை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

# பேராசிரியர் பிறந்த நாள்; நூறாயிரம் பாடுவோம்!



விண்ணளாவும் புகழோடு
விளங்குகின்ற பேரறிஞர்
அண்ணாவின் மனங்கவர்ந்த
அன்பழகப் பெருந்தகையே!
தண்காவிரி நீர்பாயும்
தஞ்சைமண் பிறந்தவரே!
அண்ணா மலைக்கழகம்
அருந்தமிழ்ப் பற்றுமேவக்
கண்ணான கல்வியைக்
கசடறக் கற்றவரே!
நுண்ணறிவோ டெப்போதும்
நோக்கோடு நுவன்றவரே!
வண்டமிழைக் கற்பித்த
வள்ளல்பேர் ஆசிரிய!

எண்ணத்தில் பகுத்தறிவும்
இயங்கலில்தன் மானமும்
கொண்டவரே, பெரியாரின்
கொள்கையில் ஆழ்ந்தபின்
அண்ணாவின் வழியிலே
ஆதிமுதல் நடந்தவரே!
மண்ணாண்ட காலத்தும்
மறவாமல் தொடர்ந்தவரே!
இன்றுங்கள் பிறந்தநாள்
இனமானம் சிறந்தநாள்;
நன்றொன்றே நினைத்தவர்நீர்;
நாடிநரம்பு எல்லாமே
என்றென்றும்
தமிழ்மேன்மை
எண்ணியதால் நிலைத்தவர்நீர்!
தன்னிலை தாழாமல்
தலைநிமிர்ந்து நின்றவர்நீர்;
பொன்பொருள் பதவிகள்
போற்றியே தந்தாலும்
என்நிலை மாறாது;ஓர்
இழிநிலை ஆகாதெனச்
சொன்னவர்நீர்; அரசியல்
சூத்திரம் அறிந்தவர்நீர்!
முன்செல்வோர் உடன்செல்லும்
முழுத்திறம் கொண்டவர்நீர்;
தன்திறம் உணர்ந்தவர்நீர்;
தலைமையோடு ஒத்தவர்நீர்!

மெலிந்த ஓர் உடலெனினும
மிடுக்கான தோற்றத்தில்
பொலிந்த ஓர் உருவந்தான்;
போராடும் உள்ளந்தான்!
நலிந்தவர் தமிழரென
நைந்திருந்த காலத்தே
வலிந்து அவர் கிளர்ந்தெழ
வாய்மையைச் சொன்னவர்!

மலிந்திருந்த அறியாமை
மடமைகள் மறைந்தொழியச்
சிலிர்த்தெழுந்த பெரியாரின்
சீர்திருத்த இயக்கத்தில்
புலர்ந்தவர்; அண்ணாவின்
புரட்சியுரை கேட்டதனால்
மலர்ந்தவர்; பகுத்தறிவும்
மானமும் மிகுந்தவர்,
உலர்ந்திருந்த தமிழர்கள்
உறுத்தெழச் செய்தவர்!

நிலந்தனை மீட்டிட
நிகர்நிலை நாட்டிட
அலகிலா ஆற்றலர்
அண்ணாவின் தம்பியாய்
உலாவியே நாடெங்கும்
உரைகளை நிகழ்த்தியே
வலம்வந்த ஒருவரே
வாட்போரும் விற்போரும்
கலஞ்செலுத்தி வென்றிட்ட
கரிகாலன் போல்தமிழ்க்
குலமுயர்ந்து நாட்டிலே
கோலோச்ச உழைத்தவர்
பலகாலம் ஊர்தோறும்
பரப்புரை பொழிந்தவர்!

விலகலாம் அண்ணாவை
விட்டெனச் சிலபேர்கள்
கலகங்கள் செய்தபோதும்
களங்கத்தைப் பெய்தபோதும்
சலசலப்பை விளைத்தபோதும்
தயக்கமே இல்லாமல்
கிலுகிலுப்பை இவர்களெனக்
கிழித்தெறிந்து விட்டவர்!

உலுத்தர்பின் போகின்ற
ஓர்இழிவைச் செய்கின்ற
மலிவான ஆளல்ல,
மானமுள்ள மனிதனெனத்
தெளிவாகத் தமைப்பற்றிச்
செப்பியவர்; அதனால்தான்
நலிந்தாலும் கலைஞருடன்
நடந்திடுவேன், எதிரிகள்
பொழிந்தாலும் கோடிகோடி
புறம்போகேன், பதவிகள்
ஒழிந்தாலும் கலைஞரன்றி
ஒருவருடன் செல்வதுதான்
இழிவினும் இழிவாகும்;
இனமானப் பழியாகும்!

விழியாத பேர்களுக்கு
வெளிச்சத்தைத் தந்துஎன்றும்
அழியாத கழகத்தை
ஆக்கிய அண்ணாவின்
வழியாகப் போவதுதான்
வாழ்விலே சிறப்பாகும்!
எத்தனையோ பேர்களிங்கே
இருக்கின்றார,போகின்றார்
அத்தனை பேர்களுமே
ஆழ்கடலில் விளைகின்ற
முத்தாக ஒளிர்வதில்லை;
முழுவுலகும் கவர்வதில்லை;
வித்துகள் பலவெனினும்
விளைவதில்லை அத்தனையும்!

முத்தாக வித்தாக
முழுப்பயன் தருகின்ற
சொத்தாகப் பிறந்தவர்
தூயபொன்னிற் சிறந்தவர்
மெத்தவும் படித்தவர்
மேன்மைப்பே ராசிரியர்
வித்தகப் பணியிலே
வெகுசிறப்பாய் விளங்கியவர்
புத்தகம் போன்றவர்
புலமையே சான்றவர்,
எத்தனை இடர்வரினும்
இனமானம் காத்தவர்;
சித்தத்தில் நல்லவர்
செயலிலே வல்லவர்
ஒத்திகை பார்க்காமல்
உரையாற்றத் தக்கவர்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

தித்திப்பை நீட்டினால்
திரும்புகின்ற குழந்தையல்ல;
மத்தாப்பைக் காட்டினால்
மயங்குகின்ற பிள்ளயல்ல
வித்தைகள் செய்வோர்பின்
விரைகின்ற ஆளல்ல!
சொத்தைகள் சருகுகள்
சுள்ளிகள் துரும்புகள்
கத்தைகள் அவையலாம்!
கழகம்போல் ஓரியக்கம்
நித்தமும் மொழிஇனம்
நிமிர்ந்திட நிலைத்திட
எத்திக்கும் சென்றவர்
இடையறாது உழன்றவர்,
கத்திக்கும் வாளுக்கும்
கைவேல் அம்புக்கும்
குத்துக்கும் மொத்துக்கும்
கொஞ்சமும் அஞ்சாமல்
புத்திக்குப் படுமாறு
புகன்றவர் மேடைகளில்!

அண்ணாவைக் கண்டதனால்
அவர்உரை கேட்டதனால்
எண்ணாத பலவற்றை
எழுத்திலே படித்ததனால்,
கண்ணற்ற குருடராக
காதற்ற செவிடராக
மண்ணுற்ற மடையராக
மக்களெலாம் கிடப்பதனைக்
கண்ணுற்ற பின்னால்
காலத்தின் தலைவரென
அண்ணாவை ஏற்றவர்;
அன்றுமுதல் இறுதிவரை
நண்ணாமல் வேறெங்கும்
நழுவியும் போகாமல்
கண்ணியம் கடமையுடன்
கட்டுப்பா டெனமூன்றில்
திண்மையாய் இருந்தவர்;
திமுக ஒன்றுதான்
உண்மையாய்த் தமிழர்கள்
உயர்வதற்கு உழைப்பதெனும்
எண்ணத்தை மக்களிடம்
எப்போதும் விதைத்தவர்!

தொண்ணூறு தாண்டியும்
துவளாமல் இயங்கியவர்,
எண்நூறு எட்டுமட்டும்
இயக்கமாய் இலகியவர்
கண்ணான பிறந்தநாள்
கழகத்தின் சிறந்தநாள்
பண்நூறு ஆயிரம்
பாடுவோம் வாழ்கவே!

வெட்டொன்று துண்டிரண்டாய்
வெடிப்புறப் பேசுபவர்,
விட்டென்றும் போகாமல்
விழைவோடு பழகுபவர்
ஒட்டென்றும் உறவென்றும்
உளமார ஒழுகுபவர்
எட்டென்றும் பத்தென்றும்
எதையுமே உதறுபவர்,
ஒட்டவரும் இந்தியெனின்
உணர்ச்சியுடன் பதறுபவர்
விட்டதனைத் துரத்திடவே
வேண்டுமெனப் பகருபவர்
முட்டுதந்து திணிப்பதற்கு
முனைவோரைக் குதறுபவர்
திட்டுகின்ற பேச்சிலும்ஓர்
தித்திப்பை வழங்குபவர்
கொட்டுகின்ற முரசொலியாய்க்
கொள்கையை முழங்குபவர்!

வளவர்கோன் சோழன்போல்
வல்லாண்மை மிக்கவர்
களம்பல கண்டவர்
கழகத்தின் இளையவர்
தளபதியை அரசியலில்
தம்முடைய வாரிசென
உளமார வாழ்த்தியே
உலகுக்கு அறிவித்த
வளமான மனத்தினர்
வருங்காலம் உணர்ந்தவர்!

குளத்துமீனாய் எதிரிகளைக்
கொத்துகிற கொக்குப்போல்
தெளிவாகக் காலத்தைத்
தேர்ந்திடும் தளபதி
வெளிப்படும் முன்னரே
விழ்த்துகின்றார் அவர்களை!
இளைதாக முள்மரம்
இல்லாமல் களைவதை
விளையாட்டாய்ச்
செய்கின்றார்
விதியறிந்த தளபதி!

கல்லூரிப் பணிதுறந்து
கழகத்திற்கு உழைத்திட
நல்லதொரு நேரமென
நவின்றிட்ட அண்ணாவின்
சொல்லினை மீறாமல்
துணிந்திரங்கித் தேர்தலில்
வெல்லவே செய்தவர்;
வெகுகால அரசியலில்
நல்லபேர் எடுத்தவர்;
நம்பிக்கை தொடுத்தவர்;
கல்லாதார் கற்றவர்
களிப்புறும் இவர்பேச்சில்
நில்லாதார் யாரிங்கே?
நினையாதார் யாரிங்கே?
சொல்லாதார் யாரிங்கே?
சுவைக்காதார்
யாரிங்கே?

போராடும் இயக்கத்தின்
பொதுச்செய லாளராகத்
தேரோடும் மன்னன்போல்
செம்மாந்து திகழ்ந்தவர்;
நீரோடும் காவிரி
நிலத்திலே உதித்தவர்,
யாரோடு மோதினும்
யானைபோல் மிதித்தவர்;
கூரோடும் அறிவோடு
கொள்கையைப் பதித்தவர்!

ஈரோட்டுப் பெரியாரின்
எண்ணத்தில் எழுந்தவர்
நேரோட்ட அண்ணாவின்
நிழலாகச் சென்றவர்
போரோட்டக் கலைஞருடன்
பொழுதெலாம் நின்றவர்!

வேரோட்டம் இல்லாமல்
வீழ்த்திட வேண்டுமென
ஆரியம் எதிர்த்தவர்;
ஆலகால நஞ்சொழிக்கும்
காரியம் ஒவ்வொருவர்
கடமையென
உரைத்தவர்!

சூரியன்போல் எப்போதும்
சுடரிடும்பே ராசிரியர்
சீரியநற் பிறந்தநாள்,
திராவிடம் சிறந்தநாள்!
பேரியக்கம் கொண்டாடப்
பெருமிதம் நிறைந்தநாள்;
ஓரிரவு நாடகம்போல்
ஒப்பற்றுத் திகழும்நாள்;
நேரியல்பே ராசிரியர்
நெஞ்சுவக்கும் பிறந்தநாள்
பேரிகை கொட்டியே
பெருமைகள் பேசியே
வாரீரோ கழகத்தீர்;
வாழ்த்துகள் கூறீரோ!